**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 122** **நாள்: 27.08.2018**

## பெருநகர சென்னை மாநகராட்சியில் பிளாஸ்டிக் தடுப்பு குறித்த சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் பொது சுகாதாரத்துறை சார்பாக நோய்த் தடுப்பு மற்றும் பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் தீமைகள் குறித்த பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி, சென்னை மாநகர் முழுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட தியாகராய நகரில் உள்ள வித்யோதயா பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் சுமார் 1000க்கும் மேற்பட்ட பள்ளி மாணவியர்கள் கலந்து கொண்டு நோய்த் தடுப்பு மற்றும் பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் தீங்கு குறித்த விழிப்புணர்வு முகாம் எக்ஸ்னோரா தொண்டு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இன்று (27.08.2018) நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், பிளாஸ்டிக் தவிர்ப்பு மற்றும் மரம் நடுவதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாணவியர்கள் அனைவரும் அவாய்டு பிளாஸ்டிக் (Avoid Plastic) என்ற எழுத்து வடிவிலும் மற்றும் மர வடிவிலும் அமர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மேலும், பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் தீங்குகள், ஒருமுறை பயன்படுத்தக் கூடிய மக்காத பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் தாள்கள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் குவளைகள், தண்ணீர் பாக்கெட்டுகள். பிளாஸ்டிக் உறிஞ்சு குழல் மற்றும் பிளாஸ்டிக் கைப்பைகள், பிளாஸ்டிக் கொடிகள் போன்றவற்றை பயன்படுத்துவதை தவிர்க்குமாறும், அதற்கு மாறாக உணவு பொருட்கள் மற்றும் குடிநீர் எடுத்துவர துருப்பிடிக்காத எஃகு பாத்திரங்கள், பாரம்பரியமாக பயன்படுத்தக் கூடிய வாழை இலைகள், பாக்கு மட்டை தட்டுகள், துணிப்பைகள், சணல் பைகள் போன்றவற்றை பயன்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும் விளக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாணவியர்கள் அனைவரும் பிளாஸ்டிக் தடுப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். மேலும், இப்பள்ளி வளாகத்தில் மூலிகை தோட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர் T.G.சீனிவாசன், எக்ஸ்னோரா அமைப்பின் தலைவர் ஆர்.கோவிந்தராஜ், தலைமையாசிரியர் V. சாந்தி மற்றும் ஆசிரிய பெருமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**